# அம்பாறையில் 20 தமிழ் விவசாயிகள் கைது

விலை ரூபா 5.00

(அம்பாறை)
அம்பாறையில் இராணுவத்திரை நடத்திய தேடுதல் வேட்டையில் 02 தமிழ் விவசாயிகள் கைதுசெய்யப்பட்டனர். அண்மையில் இப்பகுதியில் நான்கு நாட்களாக நடை

(4-ம் பக்கம் பார்க்க)


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 19 இதழ் 51
யாழ்ப்பாணம் புதன்கிழமை 01 — 04 — 1992


## முல்லையில் பகலில் ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச்சட்டம் இன்று முதலாம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரை க. பொ. த. பரீட்சைக்காகத்

(4ம் பக்கம் பார்க்க)

## 'ஹெலி' தாக்குதலில் சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
கெற்பலி அகதி முகாமிலுள்ள குடிசைகளை நோக்கி நேற்று முன்தினமிரவு 12மணியளவில் ஹெலிகொப்டரிலிருந்து கடுமையான 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் 10 வயதுச் சிறுவன் காயமடைந்த நிலை

(4ம் பக்கம் பார்க்க)

### ★ 3 மாதத்தில் புலிகள் தீரமிகு சாதனை

# 450 படையினர் உயிரிழப்பு

# 35 காவலரண்கள் தகர்ப்பு

## கனரக வாகனங்கள் அழிப்பு - பல ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
...5 மூன்று மாத காலத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய ஐம்பதிற்கும் மேற்பட்ட தாக்குதல்களில் 450ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். 35 இராணுவ காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டன. 7 கனரக வாகனங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. ஆர். பி. எல். எனப்படும் பின் உதைப்பற்ற பீரங்கி, இரு 50 ஹலிபர் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

...லங்கா கடற்படை பல நடவடிக்கைகளுக்கு பாவித்த நவீனரகநீருந்து விசைப்படகு ஒன்றும் புலிகளால் இந்த சாலப்பகுதியில் மூழ்கடிக்கப்பட்டது.

தமது எல்லைகளை விஸ்தரிக்க இராணுவத்தினர் மணலாறு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் மேற்கொண்ட சிக்ஸர், வன்னி விக்கிரம, றேசர், கிறீன்வே, கிழக்கு துண்டாடல் போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகள் யாவும் புலிகளின் தீரமிகு தாக்குதல்களினால் முறியடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## மின் துண்டிப்பு

(கொழும்பு)
தென்பகுதியில் இன்று முதல் பல இடங்களில் மின் துண்டிப்பு நடைபெறும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

நாட்டிலேற்பட்ட அதிக வரட்சி காரணமாக இந்த மின்துண்டிப்பு இடம் பெறுவதாக தெரியவருகிறது.

## வாகன விபத்துக்களில் பத்துப் பேர் காயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் நேற்று இடம் பெற்ற வீதி வாகன விபத்தில் பத்துப்பேர்வரை காயமடைந்தனர். இவர்களில் ஏழுபேர் நேற்று யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் இராசவீதி பருத்தித்துறை வீதிச் சந்தியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பத்மநாதன் மணிமாறன் [13 வயது] என்பவர் மோட்டார் சைக்கிளினால் மோதப்பட்டு சுயநினைவற்ற நிலையிலும் நேற்று இயக்கச்சி - கொடிகாமம்

(4ம் பக்கம் பார்க்க

# இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங்சோலங்கிராஜினாமா

(புதுடில்லி)
இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. மாதவசிங் சோலங்கி தமது அமைச்சர் பதவியை நேற்று ராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று நண்பகல் இவர் தனது ராஜினாமாக்கடிதத்தை பிரதமர் திரு. நரசிம்மராவிடம் ஒப்படைத்தார்.

இத்தகவலை நாடாளுமன்ற விவகார அமைச்சர் குலாம் நபி அஷாத் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

1986ம் ஆண்டு இந்திய பிரதமராக ராஜீவ் காந்தி இருந்தபோது சுவீடன் நாட்டிலிருந்து போர்பஸ். எனப்படும் நிறுவனத்திடம் வாங்கப்பட்ட பீரங்கி வர்த்தகத்தில் அந்நிறுவனம் 50 மில்லியன் டொலர் (150 கோடி ரூபா) லஞ்சத்தை இந்திய அரசின் தலைவர்களுக்கு அளித்ததாக ஒத்துக்சொண்டது.

இந்த லஞ்சப்பணம் சுவிஸ்லாந்து வங்கியில் போடப்பட்டதாகக் கூறப்பட்டதை

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த [உ/த] பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் இன்று புதன்கிழமை, கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சை [1991] 70 நிலையங்களில் ஆரம்பமாகின்றது.

9,998 பரீட்சார்த்திகள் தோற்றும் இப்பரீட்சையின் 10 நாட்களுக்குரிய வினாத் தாள்கள், கொழும்பிலிருந்து உரிய நேரத்தில் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களது அடையாளத்தைஉறுதிப்படுத்துவதற்கு, அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பற்றுச்சீட்டு, அடையாளஅட்டை, றைவிங் லைசென்ஸ், பாஸ்போர்ட், தனிப்பட்ட பரீட்சார்த்திகள், தாம் படித்த பாடசாலையின் அதிபர் மூலம் புகைப்படத்தில் உறுதிப்படுத்

(4-ம் பக்கம் பார்க்க)

### மார்ச் மாதத்தில் மட்டும்

## நாய்களினால் கடியுண்டு நானூறு பேர் காயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாவில் கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 400 பேர் வரை நாய்க்கடிக்கு உள்ளாகி, யாழ். பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 76 பேர் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டு ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்தினை ஏற்றிவருகின்றனர்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களைவிட, நாய்க்கடிக்காளகியவர்கள் அதிகரித்துள்ளமை யாழ். பொது மருத்துவமனைப் பதிவேட்டிலிருந்து தெரியவருகிறது.

இவ்வருடத்தின் 3 மாத காலத்திற்குள் யாழ். மாவட்டத்தில் 1,000 பேர் வரையில் கட்டாக்காலி நாய்களின் கடிக்குள்ளாகி இருக்கின்றனர் 900 பேர் வரையில் யாழ். பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். விசர்நாய்க்கடிக்கு உள்ளாகிய

(4-ம் பக்கம் பார்க்க]

## வில்லி லில்லி வந்தது

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை துறைமுகத்தை 'வில்லி லில்லி' கப்பல் நேற்றுக் காலை 7-15 மணிக்கு வந்தடைந்தது.

இக்கப்பலில் அரிசி 1500 மெட்றிக் தொன், மா 1400 மெட்றிக் தொன், சீனி 200 மெட்றிக் தொன், தேயிலை 11 மெட்றிக் தொன், சவர்க்காரம் 5 மெட்றிக் தொன்னும் மற்றும் 185 தபால் பொதிகள், உணவு முத்திரைகள், இலவச பாட நூல்கள் ஆகியனவும் வந்து சேர்ந்தன.

(150)

## தமிழ் பிச்சைக்காரரின் பையில் 54,000 ரூபா

கொழும்பு - புறக்கோட்டையில் நடுத் தெருவில் இறந்து கிடந்த தமிழ் பிச்சைக்காரர் ஒருவரின் கந்தல் பையிலிருந்து 54,600 ரூபா பணம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கந்தையா என்ற இந்த பிச்சைக்காரரே இறந்து கிடந்தவராவார். மேற்படி பணத்தில் 600 ரூபா மாத்திரம் நூறு ரூபா நோட்டுக்களாகவும் மிகுதிப் பணம் 10 ரூபா, 20 ரூபா நோட்டுக்களாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ள இப்பணத்தை இறந்தவரின் சொந்தக்காரர் 6 மாதத்தினுள் பெறத்தவறின் பணம் அரசுடமையாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# 'புலிகளின்தற்போதையபலம் குறைந்ததாகத்தெரியவில்லை"

## இராணுவ அதிகாரி மதிப்பீடு

(கொழும்பு)
''புலிகளின் தற்போதைய பலத்தை மதிப்பீடு செய்தால் அவர்களது பலம் குறைந்ததாகத் தோன்றவில்லை'' என்று சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் சைக்கிளில் வந்து டாங்கு காப்புப் படையினரைத் தாக்கிவிட்டு மக்களுக்குள் ஓடி மறைந்து வந்த புலிகள் இயக்கத்தினர் தற்போது பெரும்படை அணியினருடன் நாட்கணக்கில் மோதி சமாளித்து வருவதையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர்நோவு எண்ணை கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி 6040)


## கருத்தரங்கு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட கொத்தணி மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் நடைபெறும் மெய்வல்லுநர்போட்டிகளில் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர்களது பெயர், பாடசாலை முகவரிகளை அனுப்பிவைக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் கொத்தணி அதிபர்கள், அதிபர்களுக்கு பணித்துள்ளார்.

(139)


For the accurate dispensing of your prescribed pair of spectacles and same day service contact

**ERIC GANESH**

[OPTICIANS]

566, HOSPITAL ROAD, JAFFNA.

Where Several varities of Imported Frames Lenses & Photogray Sunglasses are available for selection.

(A-6107)


## அஞ்சலித்துளிகள்



### அமரர் தோமா டானியல்

[ஏழாலை மகாவித்தியாலய கொத்தணி அதிபர்]

**தோற்றம்: 1934 03 - 12 மறைவு: 1992 - 02 - 01**

கல்லான் என்பர் கலைஞன் என்பர்
சூழ்ந்து நின்றும் துதிப்பர்
சொல்லா வசையும் சொல்வர்
ஆனல்
எல்லாநாளும் ஒருநாள் போல்
இருப்போம்.

எம்மனத்தளவில் என்ற நிலையில் எம்மை வழி நடத்திய எமது அதிபர் அமரர் ஆகிவிட்டார். அவரது ஆன்மா சாந்தி அஞ்சலிக் கூட்டம் 1-4-92 இன்று யா/ஏழாலை மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறுகின்றது.

அமரர் அருமை உப்பினருமை போன்றது
உப்பு சமைந்தால் தெரியும் உப்பினருமை
அப்பன் சமைந்தால் தெரியும் அப்பனருமை.

அஞ்சலிப்பவர்

**அதிபர், ஆசிரியர், மாணவர், சிற்றூழியர், பா. அ. சங்கம், ஏழாலை.**

(ஏ-2010)

# தேசத் துரோகிகள் ஐவரும் அவர்கள்மீதானகுற்றங்களும்

(யாழ்ப்பாணம்)

'தேசத்துரோகிகளை எமது தாயகம் மன்னிக்காது, என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள துண்டுப் பிரசுரத்தில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐவரினது பெயர் விபரங்களும் அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளும் வருமாறு;

முழுப்பெயர்: தில்லையம்பலம் தாமோதரம் பிள்ளை [வயது: 70], முகவரி: உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், தொழில்: ஓய்வுபெற்ற பொலிஸ், திருமாணமாகி மூன்று பிள்ளைகள்.

துரையப்பா கொலை நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்து தண்டனை வழங்குவதில் முனைப்புடன் செயற்பட்டார், ஆவரங்கால் மக்கள் வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்களை எதிரியிடம் பிடித்துக் கொடுப்பதற்காக தேடுதல் மேற்கொண்டு இதில் சம்பந்தப்பட சுப்பிரமணியம் என்பவரைக் கைதுசெய்துள்ளார். செம்மணியில் வைத்து 1976ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் [10-08-1976] நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவிற்கு சென்று வீடு திரும்பிய பரராசா என்ற தமிழ் மகன் ஒருவரைச் சிங்களப் பொலிசார் சுட்டுக் கொன்ற சமயம் இவரிடம் ஆயுதம் இருந்ததால் பொலிசார் சுட்டார்கள் எனப் பொய்யான அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்து சிங்களப் பொலிசாருக்கு சார்பாக நடந்துகொண்டார், செல்லக்கிளி அம்மானைத்தேடி உருத்திரபுரம் சென்று அங்கு ஒரு கடையில் வைத்து அவரைக் கைதுசெய்து கொண்டு வரும்போது அவர் விசுவமடுவில் வைத்துத் தப்பித்துக் கொண்டார். மீண்டும் செல்லக்கிளி அம்மானைத் தேடி அவரது கல்வியங்காடு வீட்டிற்குச் சென்று தந்தையாரை அடித்து துன்புறுத்தி மிரட்டினார், தங்கத்துரை. குட்டிமணி ஆகியோரைத் தொண்டைமானாற்றில் வைத்துக் கைதுசெய்ய முற்பட்ட சமயம் அவர்கள் இருவரும் இவர் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டனர், தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், சிங்கள அரசினால் வழங்கப்படும் பதவி உயர்வுகளுக்காவும் இவர் இப்படியான துரோகச் செயல்களைச் செய்துள்ளார்.

முழுப்பெயர்: சொலமன் பேரின்பநாயகம் (வயது 62), முகவரி: 261, பாங்சோல்வீதி, யாழ்ப்பாணம், தொழில்: மர வியாபாரம், திருமணமாகி ஆறுபிள்ளைகள்.

1970ம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ். மாநகர சபை முதல்வராக அல்பிரட் துரையப்பா இருந்த சமயம் இவர் உதவி முதல்வராக இருந்தார், துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டு பிடிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டுள்ளார்.

முழுப்பெயர்: தம்பன் செல்லத்தம்பி, (வயது 42), முகவரி: துன்னாலை தெற்கு, கரவெட்டி, தொழில் கொள்ளையடித்தல், திருமணமாகி நான்கு பிள்ளைகள்.

இவர் 1980ம் ஆண்டு தொடக்கம் கொள்ளை, பாலியல் வன்முறை போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுவந்துள்ளார், நெல்லியடிச் சந்தியில் வைத்து பல சைக்கிள்களை களவாடியுள்ளார், 1981ம் ஆண்டளவில் வேறு சிலருடன் இணைந்து குடவத்தை அம்பன் வைத்தியசாலையில் கொள்ளையடித்ததுடன். இருபெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினர், துன்னாலையைச் சேர்ந்த கிட்டினர், குழந்தையர், த. கந்தையா என்பவர்களது வீட்டில் கொள்ளையடித்துள்ளார், துன்னாலையைச்சேர்ந்த பொன்னையா என்பவரது கடையில் கொள்ளையடித்துள்ளார், முத்தையன்கட்டில் ஒருவரை மிரட்டி (1.5) ஒன்றரை லட்சம் பணம் பறித்துள்ளார்.

முழுப் பெயர்: இராமையா இராமலிங்கம் (வயது 41), முகவரி: கூழாங்குளம், நெலுங்குளம், தொழில்: மெக்கானிக், வியாபாரம் வவுனியா, திருமணமாகி நான்கு பிள்ளைகள். இவர் மத்துகம (களுத்துறை) என்ற சிங்களக் கிராமத்தில் பிறந்தவர். 1990ம் ஆண்டு தொடக்கம் வியாபாரம் செய்து வந்துள்ளார். 1991ம் ஆண்டு காலப் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தரான ஜெயக்கொடி என்பவருடன் தொடர்பு ஏற்பட்டது. ஜெயக்கொடி விடுதலைப்புலிகளின் வெளியீடுகள் கொண்டு வந்து தரும்படி கேட்டபோது கொண்டுசென்று கொடுத்துள்ளார். பின்னர் இராணுவச் சிப்பாய்களானபந்துளா, சுதா என்பவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். பாலாப்பைக்கல் சந்திக்குப் போராளிகள் வந்துபோவது பற்றிய தகவல் கொடுத்துள்ளார். இவரது வீட்டிற்கு அருகில் உள்ள மகாஜன (f) பாமிற்கு விடுதலைப்புலிகள் வந்துபோவதாகத் தகவல் கொடுத்துள்ளார். இவரது பிரதேசத்திற்குள் வந்து போகும் ஒரு போராளியின் அங்க அடையாளங்களுடன் விபரங்கள் கூறியுள்ளார். இவற்றைவிட இராணுவக் கோப்பிரல் ராஜபக்சாவிடம் காக்கையன்குளத்தில் அமைந்திருந்த விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி அலுவலகம் பற்றிய தகவல் கொடுத்துள்ளார். கல்மடுவில் உள்ள விடுதலைப்புலிகள் முகாம் பற்றித் தகவல் கொடுத்துள்ளார் சின்னக்குள சிற்றூரவை பற்றிய தகவல்கொடுத்துள்ளார் மாவீரர் நாள் ஏற்பாடுகள் பற்றிய தகவல் கொடுத்துள்ளார். மாவீரர் நாளுக்கு ஊரில் சோடனை செய்தபோது மக்களில் சிலர் இவரால் இராணுவத்திடம் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளனர். இவருக்கு இராணுவத்தால் வழங்கப்பட்ட அனுமதி (பாஸ்) எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளது. வியாபார நலனுக்காகவே இத்தேசத்துரோகநடவடிக்கைகளில்ஈடுபட்டுள்ளார்

முழுப்பெயர்:- முனுசாமி, யோசேப். (வயது.- 33), முகவரி:- இல: 230, சேவிஸ் வீதி, கனகாம்பிகைகுளம் கிளிநொச்சி திருமணமாகி மூன்று பிள்ளைகள்.

இவர் 1976-ம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சி அம்பிகா ஸ்ரோர்சில் வேலைசெய்தார். இவரது தந்தை முன்பு ராணுவத்தில் செயற்பட்டவர் இக்கடைக்குப் பக்கத்தில் இருந்த கிளிநொச்சிபொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஐ. பி. நாதன், சந்திரத்திலக்கா என்பவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. 1990-ம் ஆண்டுக்காலப்பகுதியில் பொருட்கள் எடுத்துவருவதற்காக கொழும்பு சென்ற சமயம் தடை செய்யப்பட்ட பொருட்களை இலகுவாக வட பகுதிக்குள் கொண்டு வருவதற்கு ஐ. பி. நாதன் மூலம் பொலிஸ் மாஅதிபர் பஞங்கொட என்பவரிடம் அனுமதி(பாஸ்) பெறுவதற்குச் சென்ற சமயம் அவருடன் தொடர்பு ஏற்பட்டது. சந்திரத்திலக்கா என்பவரின் தொடர்பால் கூட்டுப்படைத் தலைமையகம் (J. O C.) சென்று கேணல் செனிவிரட்ண, கேணல் பண்டாரா என்பவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். கிளிநொச்சி திருநகர் மஞ்சுளா பேக்கரிக்கு முன்னால் உள்ள இரு விடுதலைப் புலிகள் முகாம் பற்றிய வரைபடக் குறிப்பினைக்கொடுத்துள்ளார். கிளிநொச்சி பஸ் நிலைய வீதியில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ம வட்டக் காரியாலயம் பற்றிய வரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார். முறிப்புக் குளத்திற்கு அண்மையாகவுள்ள மக்கள் முன்னணிப் பிரதேசக் காரியாலயம் பற்றிய வரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார். கிளிநொச்சிக் குளத்திற்கு அண்மையாக அமைந்துள்ள விடுதலைப் புலிகள் முகாம் பற்றிய வரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகள் முகாம் பற்றிய வரைபடக் குறிப்பினைக் கொடுத்துள்ளார்.

1991-ம் ஆண்டு ஐப்பசி மாதம் கொழும்பில் தங்கி நின்ற விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவரைத் தற்செயலாகக் கண்டு அவ்வுறுப்பினருக்கு உதவுவதாக நடித்து உரையாடி, பழகி அவருடைய முகவரியை அறிகின்றார். பின்னர் கெசல்வத்தை பொலிஸ் நிலையத்திற்குத் தொலைபேசி மூலம்(இல. 421944)ஐ.பி.தர்மசிறி என்பவரிடம் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட உறுப்பினரைக் கைது செய்ய ஏற்பாடு செய்தார். அதன் பின்னர் கேணல் செனிவரத்ன என்பவருடன் செய்த ஏற்பாட்டின்படி குறிப்பிட்ட இயக்க உறுப்பினர் தாம் எவ்வாறு காட்டிக் கொடுக்கப்பட்டார் என்பதை அறியாவண்ணம்அவரது விசாரணையில் நேரடியாகப் பங்கு பற்றி விசாரணையின்போது சிறிலங்கா புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளான கேணல் செனிவரத்ன, மேஜர் குணரட்ன, லெப். கன்கேவா ஆகியோருக்கு உதவி செய்தார். இவருக்கு கூட்டுப்படைத் தலைமையகத்தில் (J. O. C.) வைத்து கேணல் செனிவரத்னவால் அனுமதி (பாஸ்)வழங்கப்பட்டுள்ளது. இவ்அனுமதியை (பாஸ்) பயன்படுத்தி வடபகுதிக்குள் தடைசெய்த பொருட்களைக் கொண்டுவந்துள்ளார்.

## இராசிபலன்

**1/04/1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 19)**

திரயோதசி: முற்பகல் 9-13 வரை, பூரட்டாதி: பின்னிரவு 3-19 வரை, அமிர்தசித்தம், கரிநாள், இராகுகாலம்: பகல் 12-11 முதல் 1-41 வரை. சுபநேரம்: மாலை 5-41 முதல் 6-11 வரை.

மேடம்: பிதா துவேஷம், பணமுடை, தொழில் பாதிப்பு.

இடபம்: தொழில்மகிழ்ச்சி, அதிகலாபம், உபசரணை

மிதுனம்: பொதுஜன ஆதரவு, குடும்பசுகம், வெகுமதி.

கடகம்: கற்பனை வாதம், தொழில் நஷ்டம், குழப்பம்.

சிங்கம்: பகைவர்தொல்லை, சிறுகாயம், மனச்சஞ்சலம்.

கன்னி: இனசன வரவு, மறைமுக உறவு, கடன்வரவு.

துலாம்: உல்லாசபயணம், சகோதர உதவி, தானதர்மம்.

விருச்சிகம்: விதண்டாவாதம், மனக்குறை, அலைச்சல்

தனுசு: பொறுமையின்மை, மனப்பதட்டம், கீழ்ப்படிவு.

மகரம்: காரிய பலிதம்,

[4-ம் பக்கம் பார்க்க

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை கொத்தணி அதிபர் அமரர் தோமா டானியேல் ஞாபகார்த்த நினைவஞ்சலிக் கூட்டம் இன்று புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்சயன் சிறப்புரையாற்றுவார். மற்றும் அஞ்சலி உரைகளும், கவிதா நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (சி)

## தவக்கால நற்சிந்தனை

இறைவனின் வார்த்தையைக் கேட்டு, அவரில் விசுவாசங் கொள்பவன் முடிவில்லா வாழ்வைப் பெறுவான். அவரது வார்த்தை எமக்கு உயிர் தரவல்லது. அவரது வார்த்தைகளுக்கு நாம் செவிமடுத்து அவரில் விசுவாசம் கொள்வோம்.


**மோ. தாசிசியஸ்**

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உப அதிபராய்
ஆண்டு பதின்மூன்றரும் பணியாற்றி சேவைக்கிலக்கணம் வகுத்த செம்மல்

# அருட்திரு P. யேசுநேசன் O. M. I.

அடிகளாரின்

# சேவைநலம் பாராட்டும் நாள்



## "நற்பணியாளன்"

அரும்பெறல் திலகன் அந்த ஞளன்
கரும்புறழ் கட்டி அன்ன அமுதன்
கருணையன் கனிந்த நற்பணி யாளன்
பல்லாண் டாகப் புனித பத்திரிசிப்
பெயருக் குருவம் அமைத்த தொண்டன்
உதவி அதிப ராளனுய் இருந்து
உள்ளம் ஈர்த்த உரவோன் யேசு
நேசன் அடிகளெம் நெஞ்சாறக் கலந்தே!

## தவஞானி

வானுடி நின்று வணங்குமோர் கொள்கை தனைத்
தானுடி நிற்கும் தவஞானி - ஊனுடி
ஓடுமிவ் உலகை உணர்ந்ததனுல் உண்மை தான்
தேடுமோர் துறவி தெரிந்து.

## "மகிழ்நனை வாழ்த்துவோமே!"

காண்பல கருமமாற்றிக் கடமையே கண்ணுயுள்ளோன்
மாண்புகழ் மாதவத்தின் மகிமையை உணர்ந்திணைந்தோன்
சேண்புகழ் மேவுசெம்மைச் செய்ந்நெறி சேருளத்தோன்
வாண்முகம் மலர்ந்துநாளும் மகிழ்நனை வாழ்த்துவோமே.

## "கல்லூரிக்கு அடிகளார் ஆற்றிய சேவை அளப்பரியது"

எங்கள் கல்லூரியில் 13 வருடங்களாக உப அதிபராகக் கடமையாற்றி, இக் கல்லூரிச் சேவையிலிருந்து இளைப்பாறும் வண. பிதா பி. யேசுநேசன் O. M. I. அடிகளாரின் சேவைநலனைப் பாராட்டிப் பிரியாவிடை கூறும் விழாவிலே வெளியிடப்படும் இம் மலருக்கு இந்த ஆசிச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

நானும் அடிகளாரும் சமகாலப் பகுதியிலேயே இக் கல்லூரியின் அதிபராகவும் உப அதிபராகவும் கடமையேற்றவர்கள். அன்று தொடங்கி இன்றுவரை என்னுடன் இணைந்து, இக்கல்லூரிககு அடிகளார் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. ஒரு குடும்பத்தின் பெருமையைக் கட்டிக்காப்பதில் கணவனுடன் சேர்ந்து பங்கேற்கும் நல்லதொரு துணைவிபோல இக் கல்லூரியின் நிர்வாகம்சார் நடவடிக்கைகளில் சிறந்த ஒரு துணைவராகவும், மாணவர்களை ஆசிரியர்களுடனும் ஆசிரியர்களை அதிபருடனும் இணைத்து நல்லுறவை வளர்த்துவந்த வகையில் நல்லதோர் இணைப்பு மொழியாகவும் மாணவர்களின் ஆளுமையை வளர்த்து சமூகம மாக்கலுக்குத் துணைபுரிந்த மேய்ப்பனுகவும் மிளிர்ந்துவந்த எங்கள் அடிகளாரைப் பற்றிக் கூறுவதானுல், ஒன்றல்ல ஓராயிரம் கூறலாம்.

எந்த ஒரு கருமத்தையும் மனத்தாங்கலின்றிச் செய்துமுடிக்கும் ஆற்றல்மிக்கவர் எங்கள் அடிகளார், சமநிலைமிக்கவராக 'பொறை' என்ற சொல்லுக்கே என்றும் இலக்கணமாகத் திகழ்ந்து வருபவர். 'இவரை விடச் சிறந்த ஒருவரை உபஅதிபராக என் சேவைக் காலத்தில் பெற்றிநப்பேனு?', என்று வினவுகையில், 'இல்லை' என்றே துணிந்து கூறுவேன்.

அடிகளார் எங்கு சென்றுலும் புகழுடனும் சிறப்புடனும் பல்லாண்டு சுகமாக வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வண. பிதா G. A. பிரான்சிஸ் யோசேவ்
அதிபர்

## வள்ளுவம் வகுத்த வழிநின்று

இன்சொல் இனிதீன்றல் — என்பும் பிறர்க்குரிய அன்புடமை
நண்பெனும் நாடாச்சிறப்பு
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல் பொறுமை — நன்மைபயக்கும் வாய்மை
சிறந்திடு நற்குணசீலன்
உம்சேவையால் எம் வாழ்வுக்கு வழிசமைத்த பெரியோய்!
இறைபணி தொடர எம்பணிவிடுத்து பதுளைக்கு ஏகிடும் உமக்கு
கண்ணில் நிறைந்திடு நீரொடு பிரியவிடை கொடுத்துநிற்கும்

— பத்திரிசிய குடும்பத்தினர்

(ஏ 2009)

# 3,43,734 குடும்பங்கள் இன்று முதல் உணவுமுத்திரைகளை இழப்பர்

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் வறுமை நிவாரண உணவு முத்திரைகளை இதுவரை பெற்று வந்தவர்களில் 3 லட்சத்து 43 ஆயிரத்து 734 குடும்பங்கள் இன்று முதல் இதனை இழக்கவுள்ளன.

700 ரூபாவிற்கு மேல் மாத வருமானம் பெற்றும் பொய்த் தகவல்களை வழங்கி இதுவரை இந்த நிவாரண உணவு முத்திரைகளை பெற்று வந்த 3 லட்சத்து 43 ஆயிரத்து 734 குடும்பங்களை புனர் வாழ்வு, புனர் நிர் மாண அமைச்சு கண்டு பிடித்துள்ளது.

இதையடுத்து இன்று 1-ம் திகதி முதல் மேற்படி குடும்பங்களுக்கு இந்த உணவு முத்திரை வழங்கப்படாது ரத்துச் செய்யப்படுகிறது.

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

சக்தி வாய்ந்த யுத்த உபகரணங்களையும் புலிகள் தயாரிக்கத் தொடங்கியுள்ளார்கள். அவர்களின் தயாரிப்பில் உருவான ஆயுதங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை என்றும் அவர் தெரிவித்தார். (ரி)

## முல்லையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளர்த்தப்பட்டுள்ளதாக கூட்டுப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தினம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இவ் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதாகவும் வடமாகாணத்தில் நடைபெறவுள்ள விசேட க. பொ. த. (உயர்தர) பரீட்சையை முன்னிட்டு இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பமகிழ்ச்சி, சுபகாரியம்.

கும்பம்: கண்ணில் வலி, கடும் சினம், அகாலபோஜனம்.

மீனம்: புதியசாதனை, கல்வியால் பெருமை புகழ்.

-ஜோஸ்யர்

## அம்பாறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற இத் தேடுதல் வேட்டையில் இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி காடுகளில் தங்கியிருந்த தமிழர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் குடிசைகளும் இராணுவத்தினரால் பிய்த்தெறியப்பட்டன.

காடுகளுக்குள் விவசாயச் செய்கையிலீடுபட்டிருந்த விவசாயிகள் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டதுடன் அவர்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு பகலலப்பட்டனர்.

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி

தல் போன்ற ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன, (சு)

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து இது உண்மைதானு என்பதைக் கண்டறிய சுவிஸ்லாந்தில் தொடர்ந்து வழக்கு நடந்து வருகிறது.

இந்த வழக்கு விசாரணையை தாமதப்படுத்தக்கோரிஅமைச்சர் திரு. சோலங்கி 5 பக்கக் கடிதம் ஒன்றை சுவிஸ் வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பியிருந்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ்பத்திரிகை செய்தி வெளியிட்டது. இவ்வாறு தாம் கடிதம் எழுதியதை சோலங்கி ஒத்துக்கொண்டு பதவி விலக முன்வந்துள்ளார்.

தற்போது சுவிஸ்லாந்தில் நடைபெறும் வழக்கு மூலம் போர்பஸ் ஊழலில் லஞ்சம் பெற்ற அரசியல்வாதிகள் யார் என்பது வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சோலங்கியின் பதவி விலகலை இந்திய எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன. (மா)

## 3 மாதத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன.

நேற்றுடன் முடிவடைந்த காலாண்டில் இராணுவத்தினரிடமிருந்து ஆர். பி. எல். எனப்படும் பின்உதைப்பற்ற பீரங்கி, இரு 50 ஹலியர் துப்பாக்கிகள், 7 ஆர். பி. ஜி. கள், 19 ஏ. கே. இலகு இயந்திர துப்பாக்கிகள், 272 சுடு குழல் துப்பாக்கிகள் உட்பட பல இராணுவ தளபாடங்களும் விடுதலைப்புலிகளினுல் கைப்பற்றப்பட்டுள்ளன.

மூன்று மாதங்களில் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட தாக்குதல்களில் இத்தனை இராணுவ தளபாடங்களும் கைப்பற்றப் பட்டன.

சென்ற வருடத்தின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவ தளபாடங்களைவிட இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

கடந்த மூன்றுமாத காலத்தில் இடம்பெற்ற புலிகளின் தாக்குதல்களினுல் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் மேற்பட்டுள்ளதுடன் இராணுவ வட்டாரத்தில் பெரும் குழப்பமும்,உளவியல்ரீதியான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளதாக தென்னிலங்கையிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி)

## கலாசார நிகழ்ச்சி

(கொழும்புத்துறை)

கைதடி நவீல்ட் பாடசாலையில் ஏப்ரல் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை போர்க்கால கலாசார நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (154)

## மார்ச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் 153 பேராவர். ஜனவரி மாதத்தில் 249 பேரில் விசர்நாய்க்கடிக்கு 22 பேரும், பெப்ரவரி மாதத்தில் 255 பேரில் 55 பேரும் விசர்நாய்க்கடிக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

3 மாத காலத்திற்குள் யாழ். மாவட்டத்தில் 15 பேர் வரையில் விசர்நாய்க்கடியினுல் பாதிக்கப்பட்டு உரிய முறையில் விசர்நாய்த் தடுப்பூசி மருந்தைப் பெறுமல் மரணமாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (56)

## வாகன விபத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிவீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கில் விபத்தில் சண்முகம் நேசராசா [30 வயது கரவெட்டி) சுயநினைவற்ற நிலையிலும், கணபதிப்பிள்ளை அருளானந்தம் (42 வயது வரணி], மாலை யாழ். ஐந்து சந்தியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர் மீது மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமுற்றவரன நாவாந்துறை கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த மனுவல் பாலத்துறை [40 வயது] மற்றும் கே. செல்வரட்ணம் (40 வயது யாழ்ப்பாணம்] கே. முருகையா [33 வயது தொல்புரம்] ஆகியோரும் வாகனவிபத்துக்களினுல் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

## ஹெலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் யாழ்.போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செல்வநாயகம் விஜயகாந்தன் (10 வயது) என்ற சிறுவனே இத்தாக்குதலில் காயமடைந்தவராவர். (56-75)

# ஓராண்டு நினைவலைகள்



லெப். பொஸ்கோ

(கணபதி . சிறீரஞ்சன்)

தாயக மண்ணில்: 15-02 1969

தாயக விடிவில்: 01-04-1991

காரிருளை நீக்கி ஒரு கனலாய் எழுந்தாய்
ஓர் இனத்தின் விடிவுக்காய் செருக்களம் புகுந்தாய்
புலியானுய் – நீ பெரும் புயலானுய்
புவி மீது அழியாத புகழானுய்!

துன்னுலை தெற்கு,
கரவெட்டி.
(சி 6110)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

# இன்று

## பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கடந்த 13 வருடங்களாக உதவி அதிபராகக் கடமையாற்றிய வண. பிதா ஜேசுநேசன், இன்று முதல் ஒய்வுபெற்று பதுளைக்கு மாற்றலாகிச் செல்கின்றுர்.

அன்னுரின் சேவையைப் பாராட்டி, இன்று காலை மேற்படி கல்லூரித் தேவாலயத்தில் திருப்பலிப் பூசை நடைபெறும். இதன் பின்னர் கல்லூரி முன்றலில் மாணவர், ஆசிரியர், பழைய மாணவர், பெற்ருேர் ஆகியோரால் பிரியாவிடை வைபவம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (வி)

ஃ ஃ

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'வதிவிட வேளாண்மைப் போட்டி'யில் வெற்றி பெற்ருேருக்கான நல்லூர்ப் பிரதேச மட்டப் பரிசளிபுப்விழா, கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

0 0

## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

நிதர்சனம், புலிகளின் குரல் செயற்பாடுகள் தொடர்பான கலைஞர்களுடனுன கலந்துரையாடலொன்று இன்று 1ம் திகதி பி. ப. 4-00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி நிதர்சனம் பொறுப்பாளர் திரு. நகுலன், (மிரேஸ்) அழைப்பு விடுத்துள்ளார். கலந்துரையாடலைத் தொடர்ந்து தமிழீழத்தில் பிரிட்டிஸ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினுல் (பி. பி, ஸி.) எடுக்கப்பட்ட வீடியோ படத்தின் தொகுப்புப் படக்காட்சியும் காண்பிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

# மரண அறிவித்தல்

## திருமதி ஆறுமுகம் நாகாத்தை பிள்ளை [அமிர்தம்]

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தடி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளை (அமிர்தம்) 31-03-1992இல் சிவபதமடைந்துவிட்டார். அன்னுர் காலஞ்சென்ற மாணிக்கம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும். தீவக முன்னுள் மணியகாரர் கதிரவேலு அவர்களின் அருமைப் பேரனுமாவார். அமரர் கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆசிரியை யா/புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலயம்) கமலாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை), யோகாம்பிகை, பாக்கியலெட்சுமி (ஆசிரியை) டாக்டர் ஆ. பேரின்பநாதன் (மாவட்ட மருத்துவமனை ஊர்காவற்றுறை), இராஜராஜேஸ்வரி, அவர்களின் அன்புத் தாயாரும் த. துரைசிங்கம் (உதவி கல்விப்பணிப்பாளர், யாழ். கல்விக் கோட்டம்), க கணேசன் (வர்த்தகர்), சு. இராமலிங்கம் (சிங்கர் கம்பனி முகாமையாளர்), ந. சித்திரவேல் (கிராமசேவையாளர்-பதிவாளர் நிலாவெளி), நவமணி (நலன்பேண் உத்தியோகத்தர் மாவட்ட மருத்துவமனை ஊர்காவற்றுறை), வி, தங்கராசா ஆகியோரின் மாமியாரும், மகேந்திரம், சிதம்பரப்பிள்ளை, மரகதம், ஆகியோரின் சகோதரியும் காலம்சென்றவர்களான அம்பலவாணர் (வர்த்தகர் யாழ்ப்பாணம்), அருணுசலம் (வர்த்தகர்), நல்லதம்பி (வர்த்தசர் திருமலை) பரநிருபசிங்கம் (வர்த்தகர்), காலம் சென்ற சுந்தரிப்பிள்ளை, காலம் சென்ற தம்பிஐயா, குணரெத்தினம், புனிதசுந்தரி ஆகியோரின் மைத்துனியும், யசோதா,லலிதாம்பிகை,மங்கையற்கரசி,கலைச்செல்வி கமலநேசன் (சுவிஸ்), குகப்பிரியா, இலங்கைநேசன் (சுவிஸ்). தவநேசன், சிவநேசன், நித்தியலெட்சுமி, சிவகுமார் (பிரான்ஸ்), சிவசங்கர் (பிரான்ஸ்), சுரேஸ்கரன், சிவப்பிரியா, அரிகரன், அனுசியா, சத்தியா, ஆகியோரின் பேத்தியும் வைத்திலிங்கம் (கண்ணன் கபே திருநெல்வேலி),குகநாதன்(பிரான்ஸ்) குணபூசணி, தர்மாம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 1-4-1992 இன்று பிற்பகல் 4 மணிக்கு அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயாணத்தில் தகனம்செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப் டுகின்றனர்.

தகவல்: டாக்டர் ஆ. பேரின்பநாதன் (மகன்)
767, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி- 6109)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/10335/81.